

Day 1
Day 2
Day 3
Day 4
Day 5
Day 6
Day 7

# கலாத்தியர் 4:4-5

# I Believe in God

## நான் தேவனை விசுவாசிக்கின்றேன்

‘‘நாம் புத்திர சுவிகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்தின்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளதக்கதாக,

காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்கு கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்’’ கலாத் 4:4-5

‘‘ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி நான் சர்வ வல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு’’ ஆதி:17:1

ஒரு சினிமா கதாநாயகியிடம் நீ என்ன விசுவாசிக்கின்றாய் என்று கேட்டபோது அவள் பதில் சொன்னாள் ‘‘எல்லாவற்றிலும் ஒரு சிறிய கொஞ்சம் மாத்திரம் சற்றேறக்குறைய விசுவாசிக்கின்றேன்’’ என்று சொன்னாள். அது அவளுடைய பிரச்சனையாயிருந்தது, குறுகிய காலத்தில் அதற்குப் பின்பு அவள் தற்கொலை செய்துகொண்டாள். அனைத்திலும் சற்றேறக்குறைய சிறிதளவு கொஞ்சம் மாத்திரமே விசுவாசிப்பதென்பது இருதயம் மற்றும் மனதை முழுமையான குழப்பத்திற்கு நேராக வழி நடத்துகிறதாயிருக்கிறது. தவறானதை மற்றும் பொய்யானதை விசுவாசிப்பது கெடுதியான தாயிருக்கிறது, தனிப்பட்ட ஒரு நபருடைய சந்தோ‘ம் அவர் என்ன விசுவாசிக்கின்றாரோ அதை அடிப்படையாக கொண்டிருக்கிறது.

அதை போலவே ஒரு கிறிஸ்தவனாக நீ என்ன விசுவாசிக்கின்றாய்? உண்மையின் அடிப்படையில் நன்றாக சுருக்கப்பட்ட விசுவாசத்தின் உன்னதமான அறிக்கையை நாம் எப்போதும் நம்முடைய திருச்சபையின் ஆராதனைகளில் சற்றேறக்குயை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளிலும் அப்போஸ்தல விசுவாச பிரமாணத்தை அறிக்கையிடுகிறோம்.

அப்போஸ்தல விசுவாசபிரமாணத்தில் பிரசங்க வரிசை கிரமத்தை இந்த காலை வேளையில் நாம் ஜெபத்துடன் ஆரம்பிப்போம் அந்த வல்லமையுள்ள தேவன் அங்கே அவ்விடத்தில் ஆழமான நம்முடைய திட நம்பிக்கை மற்றும் எப்போதும் மிகப்பெரிய சந்தோ‘ம் நம் ஜீவியத்தில் நிறம்பியிருக்கும்படியாக

சந்தோ‘ம், ஆறுதல் மற்றும் நாம் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தில் யாரை அறிக்கையிடுகிறோமோ அவருக்கு சேவை செய்வதை அவர் நமக்கு அருளுவராக

கிறிஸ்துவ மார்க்கத்தின் பிரமாணங்களில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மிகவும் தொண்மையான ஒன்றாக அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம் உள்ளது, இது மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் பிரிவானது பிதாவாகிய தேவனைப் பற்றியும், இரண்டாம் பிரிவானது தேவனுடைய குமாரனைப்பற்றியும் மூன்றும் பிரிவானது பரிசுத்த ஆவியாகிய தேவனைப் பற்றியும் பேசுகிறது.

**<u>முதற்பிரிவு :</u>** பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வ வல்ல பிதாவாகிய தேவனை நான் விசுவாசிககின்றேன்.

## I. <u>நான் விசுவாசிக்கின்றேன்.</u>

ஆங்கில பாஷையில் ஃவிசுவாசம்’’ விசுவாசம் 7 எழுத்துக்களைக் கொண்ட வார்த்தையானது மிக மிக முக்கியமான வார்த்தையாக இருக்கிறது.∴’’ இதற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்போழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி’’ அப் 16:31

‘‘விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கபபடுவான். விசுவாசியாதவனோ ஆக்கினிக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்’’ மாற்கு 16:16 ஒவ்வொரு தனிப்பட்ட நபருடைய சந்தோ‘ம் மற்றும் இரட்சிப்பு விசுவாசம் என்ற இந்த வார்த்தைக்கு சரியான அர்த்தத்தை புரிந்துகொள்வதை சார்ந்தே உள்ளது.

விசுவாசம் என்பதற்கு சரியான அர்த்தம் என்ன என்பதற்கு கீழ்கண்ட கதை ஒரு விளக்கபடத்தை காட்டும். ஒரு இரண்டு அடுக்கு மாடிவீடு தீப்பிடித்துக்கொண்டது. ஒரு சிறியப்பெண் அந்த வீட்டின் இரண்டாவது மாடி ஜன்னலின் முன்பகுதியில் காணப்பட்டாள். தீயனைப்பு படைவீரர் ஒரு பெரிய வலையை விரித்து அந்த வலையில் குதிக்கும்படியாக மன்றாடினார்கள். ஆனால் அவள் குதிக்கவில்லை தன்னுடைய வீடு தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது. என்ற செய்தியைக் கேட்ட அந்த சிறு பெண்ணின் தகப்பனார் அதே வேளையில் சாத்தியமானவரை விரைவாக அங்கு வந்து சேர்ந்தார். அவர் காரைவிட்டு குதித்தோடி ஜன்னருகே வந்து அந்த பெண்ணை குதிக்கும்படி அழைத்தார்.

உடனடியாக அந்தப் பெண் தன்னுடைய தகப்பனாருடைய கரங்களுக்குள் குதித்தாள். ஏன்? அவள் குதித்தாள் ஏனென்றால் அவள் தகப்பனாரை அவள் அறிவாள் மற்றும் தகப்பனார் பேரில் அவளுக்கு நம்பிக்கை.

தேவனில் விசுவாசம் வைப்பதென்பது தேவனுடைய பலத்த கரங்களுக்குள் நம்மை முழுமையாக ஒப்படைப்பதென்பது அர்த்தமாகும் ஏனென்றால் நீ அவரை அறிந்திருக்கின்றாய் மற்றும் அவர் பேரில் நம்பிக்கையுடையவனாயிருக்கின்றாய். எல்லா வழியிலும், நிலையிலும் அவரை நம்புவது, அவர் உன்னை பராமரித்து பாதுகாப்பார், சரீரம் மற்றும் ஆத்துமாவை காப்பார் என்ற நம்பிக்கையே இதனுடைய உண்மையான அர்த்தமாயிருக்கிறது.

கிறிஸ்தவர்களாய் இருக்கிற நீங்கள் அனுபவத்தின் மூலம் இந்த வார்த்தைக்கு அர்த்தம் அறிந்துகொள்கின்றீர்கள் விசுவாசிப்பது என்ன ஒரு சந்தோ'மாயிருக்கிறது. இந்த காலை வேளை ஆராதணையில் மறுபடியுமாக அறிக்கியிடுங்கள்: நான் விசுவாசிக்கின்றேன்.

''நான் விசுவாசிக்கின்றேன்'' என்று நாம் சொல்வதை கவனி ''நாம் விசுவாசிக்கின்றோம்'' என்று சொல்லவில்லை. ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்'' ஆபகூப் 2:4 என்று வேதம் சொல்லுகின்றது. நாம் நம்முடைய தகப்பனார், தாய், சகோதரி மற்றும் சகோதரனுடைய விசுவாசத்தினால் பிழைக்கவில்லை – ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் விசுவாசிக்க வேண்டும், விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் அவர்களுக்காக பேசவேண்டும் ஆனால் எவ்வளவு ஆச்சர்யமாயிருக்கிறது. ஆராதனையில் சிறுவர்கள் வாலிபர்கள் அனைவரும் ஐக்கியமாக பொதுவாக அறிக்கையிடுவது ஆச்சர்யமாயிருக்கிறது. ''நான் விசுவாசிக்கின்றேன்.''

II. நான் தேவனை விசுவாசிக்கின்றேன்.

அங்கே அவ்விடத்தில் ஒரே ஒரு தேவன் மாத்திரமே இருக்கின்றார். ''என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்'' யாத்20:3. எவ்வாறாயினும் பாவம் உலகத்தில் வந்தபோது ஜனங்கள் தங்களுக்கென்று மற்ற கடவுள்களை உண்டாக்கிக்கொண்டனர். இஸ்ரவேல் ஜனங்களும் தங்கத்தால் செய்யப்பட்ட கன்றுக்குட்டியை அராதித்தனர். பரிசுத்த பவுல் ஏதேன்ஸ் பட்டனத்திற்கு வந்தபோது ஒரு ஆலயத்தைக் கண்டார் ஒவ்வொரு வீதியிலும், எல்லா இடங்களிலும் பலதரப்பட்ட தேவர்களை ஆராதிப்பதையும் அதே வேளையில் ஒரு பலிபீடத்தின்மேல் ''அறியப்படாத தேவன்'' என்று எழுதிவைத்து ஆராதிப்பதையும் ஏனென்றால் எந்த தேவர்களையும் எழுதிவைத்து ஆராதிப்பதையும், என்பதில் உறுதியுடையவர்களாகவும் அந்த ஜனங்கள் இருந்ததையும் அவர் பார்த்தார். இன்றைய இந்திய தேசத்தில் பட்டணங்கள், நகரங்கள், சாலைகள் எல்லாம்

கோவில்களாலும் புண்ணிய ஸ்தலங்களாலும் நிறம்பியுள்ளது பலதரப்பட்ட பல்வேறு தேவர்களை ஆராதிக்கின்றனர். இந்திய தேசத்தில் இருக்கிற ஜனங்களைவிட கடவுள்கள் அதிகமாக இருப்பதாக ஒரு சிலர் சொல்லுகின்றனர். கொஞ்சம் ஏறக்குறைய ஆறுநூறு மற்றும் ஐம்பது கோடி கடவுள்கள் இருபதாக சொல்கின்றனர். அமெரிக்க தேசத்தில் எங்களுடைய தேவர்கள் எல்லாம் இயற்கையில் எளிதில் கண்டுணர முடியாதவைகாளக இருக்கிறது. அவர்கள் மிக முக்கியமான வி'யங்களை முக்கியமான பகுதிகளாக கொண்டுள்ளனர். வீடுகள், ஆட்டோமெபைல்ஸ் நிலம் பாலுறவு சந்தோ'ங்கள், அதிகாரம், கல்வி, களியாட்டங்கள் மற்றும் பலதரப்பட்ட மற்ற காரியங்களை மிகமுக்கியமான பகுதிகளாக கருதுகின்றனர். அங்கே அவ்விடத்தில் நிறைய தேவர்கள் எங்கள் நிலத்தில் ஜனங்களுடைய இருதயம் மற்றும் மனதில் முதல் இடத்தை பெற்றிருக்கிறது.

பலதரப்பட்ட அநேக திரளான கடவுள்களுக்கு மத்தியில் தேவனுடைய கிருபையின் மூலம் உன்னுடைய குரலை உயர்த்தி வெள்ளி, பொன் மனிதர்களுடைய கை வேலைப்பாடுகளினால் உண்டாக்கப்பட்ட தேவர்களை தள்ளிவிடுவது மாத்திரம் அல்ல ஆனால் நம்முடைய விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிட வேண்டும். ஒரே மெய்யான தேவனை இருககிறவரும் எப்போதும் இருக்கிறவருமான தேவனை நான் விசுவாசிக்கின்றேன். எல்லா இடங்களிலும் இருக்கிற ஜனங்கள் அவரை அறிந்திருக்க வேண்டும் அவரில் நம்பிக்கை வைக்க வேண்டும் எனென்றால் அவர் அதிசயமான தேவன்.

## III. <u>பிதாவாகிய தேவனை நான் விசுவாசிக்கின்றேன்.</u>

நம்முடைய விசுவாசப் பிரமாணத்தில் நாம் தேவனை பிதா என்று அழைக்கிறோம் ஏனென்றால் இயேச கிறிஸ்துவுக்கு அவர் பிதாவாயிருப்பதினால் மாத்திரம் அல்ல ஆனால் பிரத்யோகமாக ஏனென்றால் அவர் நம்முடைய பிதாவாயிரக்கிறார்.

நம்முடைய பிதாவாய் அவர் இருப்பது அவருக்கு எளிதானதல்ல பாவம் நம்மை தேவனிடத்திலிருந்து தனியாக பிரித்தது. பயம், சந்தேகம், அவநம்பிக்கை, மாம்சத்தின் இச்சை அவரிடத்தில் நாம் நம்கிக்கை வைப்பதை அனுமதிக்கவில்லை. தேவனுக்கு கீழ்படிவதைக்காட்டிலும் சாத்தானுக்கு கீழ்படிவதற்கு முக்கியம் கொடுத்தோம் சாத்தான் நம்முடைய பிதாவாயிருப்பதற்கு மிகுந்த சந்தோ'ம் உடையவனாயிருக்கின்றேன். அடிமைத்தனம், மரணம் மற்றும் பேரழிவே அதனுடைய முடிவாயிருக்கிறது. இது நாமகவே, நம் சுயவிருப்பத்தின்படி தெரிந்து கொள்வதாயிருக்கிறது. தேவனுடையதல்ல அவர்

சிரு'டித்த அனைவருக்கும் பிதாவாய் இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. ஆதாம் ஏவாள் பாவம் செய்த பின்பு உடனடியாக ஒரு இரட்சகரை அனுப்புவதாக தேவன் வாக்குதத்தம் செய்தார்.

நம்முடைய வேத வசனம் சொல்கிறது.

''காலம் நிறைவேறினபோது ஸ்தீரியினிடத்தின் பிறந்த வரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்'' கலாத் 4:5

என்ன ஆச்சர்யமான அன்பு! தேவன் ஒரு இரட்சகரை வாக்குதத்தம் மாதிரம் செய்யவில்லை. அவருக்கு இருந்த ஒரே பேறான மகனை அனுப்பினார். பரலோகமும், பூலோகமும் ஸ்தீரியினிடத்தில் பிறக்கும்படி அவரை அனுப்பினார். இந்த மகன் நமக்குப் பதிலாக நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்திற்குட்பட்டு ஜீவித்தார் மற்றும் கிரையம் செலுத்தி நம்மை திரும்பவும் மீட்டெடுத்தார் (திரும்ப வாங்கினார்) சந்தேகத்திற்கு இடமின்றி மிகவும் உயர்ந்ததாயிருக்கிறது. கெத்'மனே தோட்டத்தில் கிறிஸ்துவினுடைய மாக வேதனை மற்றும் அவர் சிந்தின வேர்வையின் இரத்த துளிகள் மாம்ச பிரகாரமாய் அவர் அனுபவித்த துன்பங்கள் முகத்தில் துப்பினது. பரிகாசம் செய்தது மற்றும் பொந்தியு பிலாத்துவுக்கு முன்பாக தலையில் முள்முடி சூடி பரிகாசம் செய்தது. கடைசியாக கல்வாரி மலையில் பாடுகளுக்கு அவரை உட்படுத்தி அவர் பாடுகளை அனுபவித்தது. அதே அளவில் மிகப்பெரிய கடுந்துன்பங்களாய் அவைகள் இருந்தன, நம்முடைய ஆசிர்வாதமான இரட்சகர் நம்முடைய மீறுதல்கள் அவர்மேல் வைக்கப்பட்ட போது அவைகளை அவர் தாங்கினார் நம்முடைய பாவங்களுக்காக அவருடைய ஆத்துமா காணிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டது. இவைகளெல்லாம் அந்த கடுந்துன்பத்தின் ஆரம்பகளிலிருந்து நம்மை விடுவிக்கும்படி அவர் நியாயப்பிரமானத்தின் சாபமானார். நாம் ஏற்றுக்கொள்ளப்பட் வேண்டும் என்பதற்காக கிறிஸ்துவானவர் தள்ளப்பட்டார். தேவனுடைய சுவிகார புத்திரர்களாக, புத்திரிகளாக தேவனுடைய வீட்டில் நாம் திரும்பவும் வந்து தேவனோடு வாழவேண்டும் என்பதற்காக கிறிஸ்துவானவர் பிதாவினுடைய வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார். அதனால்தான் நாம் அவரை பிதா என்று அழைக்கிறோம்.

தேவன் நம்முடைய பிதாவாயிருக்கிறார். அவர் நம்மை பராமறிக்கிறவராயிருக்கிறார்.

''உங்களில் எந்த மனு' னானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிறதன் மகனுக்கு கல்லை கொடுப்பானா?

மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பை கொடுப்பானா? மத் 7:9-10. கொடுக்கமாட்டான் அல்லவா. நல்ல காரியங்களை நம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்கவேண்டும். சாதாரண மனிதர்களாய் இருக்கிற நாம் எப்படி அறிந்திருக்கிறோமோ, எவ்வளவுக்கு அதிகமாக வேதம் உறுதியாயிருக்கிறது. நம்முடைய பரலோகப் பிதா அவரிடத்தில் கேட்பவர்களுக்கு பரிசுத்த ஆவியை உறுதியாக கொடுக்கிறார். “பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆகியை கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்” லூக்11:13.

தேவன் நம்முடைய பிதாவாயிருக்கிறார். அன்பான பிள்ளைகள் தங்களுடைய சொந்த தகப்பனிடதிற்கு போவதைப்போல நாமும் நம்முடைய பரலோக தகப்பனிடத்திற்கு போக முடியும். அவரிடத்தில் நாம் பேச முடியும் மற்றும் நம்முடைய இருதயத்தை ஊற்றி நம்முடைய ஆவலை அவரிடத்தில் கொல்ல முடியும் அவர் நமக்கு செவிகொடுக்கிறார் மற்றும் உதவி செய்கிறார். என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

தேவன் நம்முடைய பிதாவாயிருக்கிறார். நாம் அவருடைய சந்ததிகள் அவருடைய சொந்த மகனான இயேசு கிறிஸ்துவுடன் இணைந்த சந்ததிகளாயிருக்கிறோம். நாம் மரபு உரிமையியல் ஒரு பாகமாக இருக்கின்றோம். நிலத்தின் முக்கியமான ஒரு பகுதியில் வீட்டில் மற்றும் பணத்தில் அல்ல இவைகள் எல்லாம் அழிந்துபோகும் மற்றும் துருப்பிடித்துவிடும்.) ஆனால் அதற்குப்பதிலாக பாவமன்னிப்பில் உள்ளான சமாதானத்தில், நம்பிக்கையில், ஒரு புதிய ஜீவியத்தில் மற்றும் கடைசியாக பரலோகத்தில் உள்ள அநேக வாசஸ்தலங்களில் நாம் ஒரு பகுதியாய் இருக்கிறோம். யார் அறிக்கையிடுகிறார்களோ அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பிதாவாகிய தேவனை நான் விசுவாசிக்கின்றேன்.

## IV. பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வ வல்லமை உள்ளவரைநான் விசுவாசிக்கின்றேன்.

நம்முடைய வேதம் சொல்கிறது: ‘‘ஆபிராம் தொண்ணாற்றொன்பது வயதானபோது கர்த்தர் ஆபிராமுகத்து தரிசனமாகி நான் சர்வ வல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிறு ஆதி 17:1

தேவதூதன் நாசரேத்தில் உள்ள மரியாளுக்கு தரிசனமாகி நீ கர்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவர் இந்த உலகத்திற்கு இரட்சகராயிருப்பார் என்று சொன்னான்.

‘‘அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி : இது எப்படியாகும்? புரு‘னை அறியேனே என்றான்’’ லூக் 1:34 அந்த தேவதூதன் அவளுக்கு பதில் பதில் சொன்னான். ‘‘ தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான்’’ லூக் 1:37 நம்முடை தேவன் சர்வ வல்லமையுள்ளவர் அவர் விரும்புவது எதுவாயிருந்தாலும் செய்யக்கூடியவர்.

தேவனுடைய சர்வ வல்லமை செய்து நிரூபிக்கப்பட்டதற்கு அவருடைய சிரு‘டிப்பு ஆதாரமாயிருக்கிறது. என்னுடைய திடப்படுத்துதல் வகுப்புகளில் ஒன்றுமில்லாத ஒன்றிலிருந்து குறிப்பிட்ட ஒன்றை உண்டாக்கி கொண்டு வரும்படி நான் ஒரு முறை அவர்களிடத்தில் கேட்டேன். இது செய்ய முடியாத ஒரு வீட்டுப்பாடம் என்பதை சீக்கிரத்திலேயே அவர்களால் உணரமுடிந்தது. ‘‘ஒன்று மில்லாத ஒன்றிலிருந்து குறிப்பிட்ட ஒன்றை உண்டாக்கினவர் யார் என்று ஒருவர் என்னிடத்தில் கேட்டார் தேவனால் மாத்திரமே அது முடியும். அவர் ஒன்றுமே இல்லாத ஒன்றிலிருந்து பரலோகத்தையும், பூலோகத்தையும் உண்டாக்கினார். அவர் சாவ வல்லமையுள்ள தேவன்.

கடந்த 25 வருடங்களாக கோடிக்கணக்கான டாலர்களை செலவு செய்து நிறைய அநேக எண்ணிக்கையில் ஜனங்களை நிலவுக்கு அனுப்புகிறோம். அது ஞானமுள்ளதா அல்லது ஞானமற்ற காரியமாக என்று நான் விவாதிக்க விரும்பவில்லை. அநேகந்தரம் எப்படியாயினும், இந்த புராஜக்ட்காக ஜனங்கள் வேலை செய்கின்றனர் நிலவில் உள்ள அதனுடைய மூலவி‘யங்களை கற்று அறிய வேண்டும் என்பதே இதனுடைய முக்கிய உத்தேசமாக சேவையாக இருக்கிறது. நிலவில் உள்ள அதனுடைய மூலகாரமான வி‘யங்களை கற்றுக்கொள்வதைக் காட்டிலும், பூமியென்ற கிரகத்தைக் குறித்து அதிகமான மூலகாரமான வி‘யங்களை கற்றுக்கொள்ள முடியும் என்று அவர்கள்

அறிக்கையிடுகின்றனர். அங்கே நிலவு எப்படி இருக்கிறது. என்பதை அறிய ஒரு பைசா கூட நாம செலவு செய்யவேண்டிய அவசியமில்லை நாம் எல்லாரும் செய்ய வேண்டியது நம்முடைய கர்வம் பெருமை விழவேண்டும் மற்றும் வேதத்தை படிக்க வேண்டும். தேவன் சொன்னார். ‘‘தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று.

வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார் : வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வெறாகப் பிரித்தார்’’ அது அப்படியே ஆயிற்று தேவன் மிகப்பெரிய இரண்டு விளக்குகளை உருவாக்கினார். மிகப்பெரிய விளக்கு பகலையும் குறைந்த வெளிச்சம் உள்ள விளக்கு இரவையும் ஆளுகை செய்கிறது. அவர் நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். ஆதி 1:14-16.

ஆம் தேவன் நட்சத்திரங்களை உருவாக்கினார். அவர் தூதர்களையும் மற்றும் மனிதர்களையும் மற்றும் மீன்களையும் மற்றும் காணபகைவள் காணப்படாதவைகள் அனைத்தையும் உருவாக்கினார். பரலோகத்தையும் மற்றும் பூலோகத்தையும் படைத்தவர் என்று நாம் எப்படி நம்முடைய விசுவாசப் பிரமாணத்தில் அறிக்கையிடுகிறோமோ அப்படி நம்முடைய தேவன் சரியாக இருக்கிறார்.

## முடிவான தீர்மானம்

யார் விசுவாசமுள்ளவர்களாய் இருக்கின்றார்களோ அவாகள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் இது நம்முடைய தேவன் - சர்வவல்லமை உள்ள பிதா! நம்முடைய ஜீவியத்தில் நமக்கு இது என்ன அர்த்தமுடையதாயிருக்கிறது இயேசு தரும்பதிரும்ப இதை செயல்படுத்தி நிரூபித்துக் காட்டியிருக்கிறார். அதே அளவில் அவரிடத்தில் விசுமுள்ளவர்களுடைய தேவைகளை அவர் சந்திக்கிறவராய் இருக்கிறார்.

தேவன் தட்பவெப்ப நிலையை கட்டுப்படுத்துகிறார். இயேசுவும் அவருடைய சீ'ர்களும் கலிலேயா கடலில் ஒருபடகில் இருந்தனர். இயேசு தோனியின் பின்புறத்தில் நித்திரையாயிருந்தார். அப்பொழுது படவு அலைகளினால் மூடத்தக்க தாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று ‘‘ஆண்டவரே எங்களை இரட்சியும் மடிந்து போகிறோம் என்றார்கள் மத் 8:25 ‘‘காற்றையும் கடலையும் அதட்டினார்’’ மாற் 4:39 ‘‘அமைதலாயிறு’’ காற்றும் அலையும் நின்றன. நம்முடைய பிதாவாகிய தேவன் சர்வ வல்லமை உள்ளவர் வானிலையில், தட்பவெட்ப நிலையில் மாற்றம் வேண்டும் என்றால் அவரிடத்தில் கேளுங்கள்.

ஒருவேளை அது உங்களுக்கு மற்றவர்களுக்கு நன்மையாயிருந்தால், அவர் மாற்றுவார்.

தேவன் ஆகாரத்தை கட்டுபடுத்துகிறார். கலிலேயா கடலின் வடக்குப் பகுதியில் இன்றைக்கும் கூட யாராவது ஒருவர் அங்கே போய் பார்த்தால் அங்கே அவ்விடத்திலே உருண்டை வடிவிலானண ஒரு இடத்தை இந்த மலையின் மேல் பார்க்கமுடியும் எங்கே நம்முடைய இரட்சகர் ஐந்தாயிரம் ஜனங்களுக்கு போதித்த இடம் அது இயேசுகிறிஸ்து பிரசங்கம் செய்து முடித்தவுடன் அவர் சீஷர்கள் பக்கமாய் திரும்பி அந்த ஜனக்கூட்டத்திற்கு ஆகாரம் கொடுக்கும்படி கேட்டார். அவர்கள் ஆச்சர்யத்துடன் கேட்டனர்.

“இங்கே ஒருபையன் இருக்கிறான், அவன்கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு. ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்” யோவான் 6:9 எல்லா ஜனங்களும் ஐம்பது ஐம்பது குழுவாக உட்காரும்படி இயேசு சொன்னார். கொஞ்சமாய் இருந்த அந்த பையன் வைத்துக்கொண்டிருந்த ஆகாரத்தை அவர் ஆசிர்வதித்தார், ஐந்தாயிரத்திற்கும் அதிகமான பேர் சாப்பிட்டு திருப்தியடைந்தனர். பிதாவாகிய நம்முடைய தேவன் சர்வ வலலமையுள்ளவர் கடந்த வாரத்தில் உனக்கு ஆகாரம், உடை வீடு இருந்திருந்தால் கர்த்தருக்கு நன்றிச் சொல்லு அவரே அதை உனக்கு கொடுத்தவர்.

தேவன் நம்முடைய சத்துருக்களை கட்டுப்படுத்துகிறார். கிறிஸ்துவானவர் கெத்தமனே தோட்டத்தில் இருந்த போது யூதாஸ் வேதபாரகர்களோடும் பிரதான ஆசாரியர்கள் மற்றும் சிப்பாய்களோடும் வந்தான். அவருடைய சீஷர்கள் மேல்அந்த ஜனங்கள் கைகளை மேலே போட ஆரம்பித்தபோது மற்றும் பேதுரு பட்டயத்தை உருவி பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரணை வலது காதற வெட்டினபோது, “இம்மட்டில் நிறுத்துங்கள் “லூக்கா 22:51 என்று இயேசு தம்முடைய குரலை உயர்த்திச் சொன்னார். அங்கே கூடியிருந்த ஒவ்வொருவரும் அவர் என்ன சொன்னாரோ அப்படியே சரியாகச் செய்தனர். நம்முடைய பிதாவாகிய தேவன் சர்வ வல்லமை உள்ளவர் நோய்க் கிருமிகள், திருடர்கள், கொள்ளைக் காரர்கள் குடிகாரர்கள் அல்லது அஜாக்கிரதையான ஓட்டுனர்கள், சாத்தானும் கூட நம்முடைய பரலோக பிதாவின் அனுமதியின்றி உத்தரவு இன்றி சேதப்படுத்தவோ அல்லது துன்புருத்தவோ முடியாது.

தேவன் ஜீவன் மற்றும் மரணத்தை கட்டுப்டுத்தும் உரிமையும் திறனும் கொண்டிருக்கிறார். எருசலேமிலிருந்து ஒரு சிறிய குன்றின் மேல் உள்ள சிறிய நகரமான பெத்தானியாவில் மரியாள், மார்த்தாள் அவர்களுடைய சகோதரன்

லாசரு வாழ்ந்து வந்தனர். லாசரு நோய்வாய்ப்பட்டு சாகக் கிடக்கும் தருவாயில் அவனுடைய சகோதரிகள் இயேசுவுக்கு ஆள் அனுப்பி செய்தியை சொன்னார்கள். எது எப்படியாயினும் லாசரு மரித்து நாலு நாட்களுக்குப் பின்பு இயேசு அங்கே வந்தார். கிறிஸ்து கல்லரை அருகில் வந்தபோது, கல்லரையை முடியிருநத பெரிய கல்லை எடுத்துப் போடுங்கள் என்று சொல்லி ''லாசருவே வெளியேவா'' யோவான் 11:43 என்று சத்தமிட்டு சொன்னார் லாசருபிறகு கல்லரையிலிருந்து ஜீவனோடு எழுந்து வந்தான்.

''இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிகிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' யோவான் 11:25 மார்த்தளைப் பார்த்து இயேசு சொன்ன இந்த வார்தைகள் காலியான பெருமை பாராட்டி கொள்ளுபவைகள் அல்ல கிரியையுடன் கூடியது என்று நிருபிக்கப்பட்டது. பிதாவாகிய நம்முடைய தேவன் ஜீவனின் மேலும் மரணத்தின் மேலும் சர்வ அதிகாரம் உள்ளவர்.

ஓரளவு எல்லா ஊழியக்காரர்களும் தங்ளுடைய சபை அலுவல்கள் பதிவேட்டில் வருகின்ற வரிசை கிரமங்களில் மரண அடக்கம் மற்றும் மரணத்திற்குண்டான சரியான காரணங்களை பதிவு செய்து வைக்கின்றனர். அப்படிப்பட்ட மரண பதிவேட்டில் ஒரு ஊழியர் மரணத்திற்குண்டான காரணங்களை எழுதும் போது மலேரியா இருதய பாதிப்பு, பெனுமோனியா.... இன்னும் பல என்றிருக்கிறது.

எவ்வாறு இருப்பினும், ஆறுவருடங்களுக்குப பிறகு அங்கே அவ்விடத்தில் தீடீர் என்று ஒரு மாற்றம் உண்டானது.

''தேவன் அவர்களை அழைத்ததர்'' என்று ஒவ்வொன்றிற்குப் பின்பும் போதகர் சாதரணமாக எழுதி வைத்திருந்தார். பெனுமோனிய அல்லது ஹார்ட் ஆட்டாக் வெளிப்புறமாக காணப்படுகின்ற அறிகுறிகள். கிறிஸ்தவர்களாகிய நாம் தேவன் நம்மை வீட்டிற்கு அழைக்கும் வரைக்கும் இங்கே நாம் வாழுவோம்.

நாமனைவரும் ஒன்று சேர்ந்து விசுவாசப் பிரமாணத்தை அறிக்கையிடும்போது நம்முடைய இருதயங்கள் எல்லாம் அனலாயிருக்கிறது என்பது அதியசமான ஒன்று அல்ல – ''பரலோகத்தையும், பூலோகத்தையும் படைத்த சர்வ வல்ல பிதாவாகிய தேவனை நான் விசுவாசிக்கின்றேன்.'' ஓ, என்ன ஆசிர்வாதமான ஜனங்கள் நாமனைவரும்! சங்கீதக் காரனோடு நாம் ஆழமாக நம்முடைய நன்றியறிகலை அறிக்கையிடுவோம்.

“கர்த்தரே தேவனென்று அறியுங்கள்: நாம் அல்ல அவரே நம்மை உண்டாக்கினார். நாம் அவர் ஜனங்களும் அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.
அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரை துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.
“கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும் அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது” சங்கீதம் 100:3-4 ஆமென்.